செய்தி வெளியீடு எண்: 112/2017 நாள் :25.02.2017

**வேலூர் மாவட்டம் காட்பாடி ஒன்றியம் தாரபடவேடு, கழிஞ்சூர் பகுதிகளில் சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணிகள் நடைபெறுவதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

வேலூர் மாவட்டம் காட்பாடி ஒன்றியம் தாரபடவேடு, கழிஞ்சூர் பகுதியில் உள்ள ஏரிகளில் பொதுப்பணித்துறையின் சார்பில் சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

வேலூர் மாவட்டம் முழுவதிலும் 7778 ஹெக்டேர் பரப்பளவில் சீமை கருவேல மரங்கள் இருக்கிறது. இதில் தற்போது வரை 806 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளது. மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சீமை கருவேல மரங்களை அந்தந்த பகுதியில் உள்ள நிர்வாகங்கள் சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த பணிகளை தன்னார்வ தொண்டர்களும் மேற்கொண்டு சமுதாயத்திற்கு தன்னால் இயன்ற பணிகளை மேற்கொள்ளலாம். வேலூர் மாவட்டத்திலுள்ள சீமை கருவேல மரங்களை அகற்றுவதற்கு குறைந்தது 3 மாத காலம் தேவைப்படுவதால் இது தொடர்பாக நீதிமன்றத்தில் அபிடாவிட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சீமை கருவேல மரங்கள் முற்றிலும் அழிக்கும் வரை இப்பணிகள் தொடர்ந்து நடைபெறும்.. மேலும் மோர்தானா அனை திறப்பது குறித்து அறிக்கையினை மாநில அரசுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது எணவும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.அன்பரசு மற்றும் பொதுப்பணித் துறை நிர்வாகிகள் மற்றும் பலர் உள்ளனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.